பக்கங்கள்:-23

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 12 | செவ்வாய்க்கிழமை | 25.06.2024 | அதிர்வு 329

## பொன்சேகாவுக்கு சஜித் கட்சி பொறி?



கட்சி தலைமையைக் கடுமையாக விமர்சித்தும், கட்சி ஒழுக்கக் கட்டமைப்பை மீறும் வகையிலும் செயற்படும் 06



# ராஜபக்ஷக்களின் மொட்டுவை உடன் கைவிட வேண்டும் ரணில்

## நிமல் லான்சா அணி வலியுறுத்து



"ராஜபக்ஷக்களின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாகக் கைவிட வேண்டும்."

- இவ்வாறு நிமல் லான்சா தலைமையிலான ரணில் ஆதரவு அணி வலியுறுத்தியுள்ளது.

அந்த அணி இந்தக் கோரிக்கையை ஜனாதிபதியிடம் எழுத்து மூலம் சமர்ப்பித்துள்ளது என்று அறியமுடிகின்றது. 06

# ரணிலுக்கு மொட்டு ஆதரவு வழங்காது!

## மறைமுகமாகத் தெரிவித்தார் நாமல்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கொள்கையைப் பாதுகாக்கும் ஒருவரே தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தக் கூற்றின் மூலம், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 06




ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் சமயம்இது. தனது தற்போதையபதவிக்காலத்தை மேலும் ஒரு வருடம் நீடிக்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறங்குவாரா, இல்லையா என்பது தான் தெற்கு அரசியலில் – ஏன் தேசிய அரசியலில் கூட – பிரதான பேசுபொருள்.

அப்படி அவர் தமது பதவிக்காலத்தை சட்டரீதியாக நீடிக்க முடியும். அதற்கு சட்டத்தில்தாராளமாக இடம்–ஓட்டை–உண்டு. உரிய முறைப்படி அதை அவர் செய்ய வேண்டும்.

ஆனால், அப்படி அவர் செய்வது தார் மீகப் பிழை என்று கருதும் எதிர்த்தரப்புகள், அதனை அரசியல் ரீதியான பிரச்சினையாக்க முயலும் என்பதும் நிச்சயம். அத்தகைய அரசியல் பிரச்சினை 06








# மட்டக்களப்பில் வீடற்றவர்களுக்கு எதிர்காலத்தில் புதிய வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“மட்டக்களப்பு மாவட்டத்தின் வீடற்ற மக்களுக்காக பல புதிய வீட்டுத்திட்டங்களை ஆரம்பித்து வைப்பது உட்பட அவர்களின் வாழ்வாதார அபிவிருத்திக்காக பல புதிய திட்டங்களை எதிர்வரும் வருடங்களில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடி பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர் தரம் கற்று வெளியேறிய மாணவர்கள் மற்றும் வேலையற்ற இளைஞர்,யுவதிகள் ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்பில் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவான இளைஞர்,யுவதிகள் கலந்துகொண்டமையுடன் அவர்களின் கேள்விகளுக்கு ஜனாதிபதி சாதகமான பதில்களை வழங்கினார்.

இளைஞர்கள் எழுப்பிய கேள்விகளும் அதற்கு ஜனாதிபதி அளித்த பதில்களும் வருமாறு:–

கேள்வி: கிழக்கு மாகாணத்தில் மட்டும் 1,800 இற்கும் மேற்பட்ட முன்பள்ளிகள் உள்ளன. ஆனால் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை போதுமானதாக இல்லை. அவர்களின் கொடுப்பனவை அதிகரிக்க யோசனை உள்ளதா?

பதில்: முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவை 2500 ரூபாவினால் அதிகரிக்க தீர்மானித்தோம். இந்த வாரம் முதல் அதனை செயல்படுத்த இருக்கிறோம்.

கேள்வி: நிரந்தர வீடு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாத ஏராளமானோர் இப்பகுதியில் வசிக்கின்றனர். அவர்களுக்கான வீட்டுவசதி மற்றும் மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டம் உள்ளதா?

பதில்: இந்த ஆண்டின் இறுதிக் காலாண்டு தேர்தல் காலமாகும். எனவே, இவ்வருடம் அந்தப் பணிகளை ஆரம்பிக்க முடியாத போதிலும், அடுத்த சில வருடங்களில் பல புதிய வீட்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

மேலும், இப்பகுதியில் சுற்றுலாத்துறை பெரிய அளவில் வளர்ச்சி அடையும் வாய்ப்பு உள்ளது. அதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, விவசாய நவீனமயமாக்கல் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அடுத்த சில வருடங்களில் இந்த மாகாணத்தில் பெரும் அபிவிருத்தி ஏற்படும்.

மேலும், திருகோணமலை துறைமுகம் உட்பட திருகோணமலை நகரின் அபிவிருத்திக்காக இந்தியாவுடன் இணைந்து செயற்பட்டு வருகிறோம். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் எதிர்காலத்தில் கிழக்கு மாகாண இளைஞர் யுவதிகளுக்கு அதிகளவிலான தொழில் வாய்ப்புகள் கிடைக்கும் என்று தெரிவித்தார்.










# கொழும்பு அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு உறுதிப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை

கொழும்பில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பாளர்களுக்கு வீட்டு உறுதிப் பத்திரம் வழங்கும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தினூடாக, அடுத்த மாதம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள 8,000 அடுக்குமாடி குடியிருப்பாளர்களுக்கு உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, ஆயிரத்து 70 உறுதிப் பத்திரங்களை வழங்கவும் திட்டமிட்டுள்ளது.

கொழும்பு அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர்களுக்கு வீட்டு உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படும் என ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழிக்கமைய இந்த உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

இதன்படி முதற்கட்டமாக மிஹிந்து சென்புர, சிறிசர உயன, மெத்சர உயன, லக்முத்து செவன, சிறிமுத்து உயன ஆகிய திட்டங்களை மையப்படுத்தி உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கு மேலதிகமாக லக்ஸந்த செவன, ரந்திய உயன, லக்முத்து உயன, முவதொர உயன, சியசத செவன, புரதொர செவன, ஜயமக செவன, மிஹிஜய செவன, ஹெலமுத்து செவன, சியபத செவன, லக்செத செவன, லக்கிரு செவன ஆகிய வீடமைப்புத் தொகுதியில் வசிப்போருக்கு முன் உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த வருட இறுதியில் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# முதன்மை பணவீக்கம் மே மாதத்தில் வீழ்ச்சி!



தேசிய நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் கடந்த மே மாதத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த ஏப்ரல் மாதத்தில் 2.7 சதவீதமாக காணப்பட்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் மே மாதத்தில் 1.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேநேரம், கடந்த ஏப்ரல் மாதத்தில் 3.3 சதவீதமாக பதிவாகியிருந்த உணவு பணவீக்கம் மே மாதத்தில் 0.5 சதவீதமாக வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

எவ்வாறாயினும், ஏப்ரல் மாதத்தில் 2.3 சதவீதமாக காணப்பட்ட உணவல்லாப் பணவீக்கமானது, மே மாதத்தில் 2.4 சதவீதமாக சிறிய அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.




# சமூக வலைத்தளங்கள் ஊடான மோசடிகள் அதிகரித்துள்ளன!

சமூக வலைத்தளங்கள் ஊடாக இடம்பெறுகின்ற மோசடிகள் அதிகரித்துள்ளமையால், அது குறித்து பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் கணினி அவசர பதிலளிப்பு பிரிவு விசேட அறிக்கை ஒன்றில் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

பேஸ்புக், வட்சப் போன்ற சமூக வலைத்தளங்கள் மற்றும் குறுஞ்செய்திகள் போன்றவற்றின் ஊடாக தகவல்களை அனுப்பி பொதுமக்களை ஏமாற்றும் முயற்சிகள் அதிகளவில் இடம்பெறுகின்றன.

குறிப்பாக தேசிய மற்றும் மத ரீதியான பண்டிகைக் காலங்களை இலக்கு வைத்து இவ்வாறான மோசடிகள் இடம்பெறுகின்றன.

இதற்காக பிரபலமான வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனைய பல வர்த்தக நாமங்கள் போலியான முறையில் பயன்படுத்தப்படுகின்றன.

அறியாத நபர்களிடமிருந்து வருகின்ற குறுஞ்செய்திகளில் இருக்கின்ற லின்க்களை மக்கள் க்ளிக் செய்வதன் மூலம், இணைய மோசடிக்காரர்கள் பொதுமக்களின் தனிப்பட்ட விபரங்களைக் களவாடுகின்றனர்.

அவற்றைப் பயன்படுத்தி நிதி மோசடிகளில் ஈடுபடுவதுடன், சில தரப்பினர் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றிருப்பதாக அல்லது அன்பளிப்புகள் கிடைக்கப்பெற்றிருப்பதாகக் கூறி, அவற்றைப் பெற்றுக் கொள்ள ஒருதொகை பணத்தை வைப்பிட வேண்டும் என்று அறிவுறுத்தியும் நிதி மோசடி செய்கின்றனர்.

அறியாத நபர்களிடமிருந்து கிடைக்கின்ற இவ்வாறான குறுஞ்செய்திகளை திறப்பதற்கு முன்னர், அவர்கள் குறிப்பிடுகின்ற நிறுவனங்களின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்துக்குச் சென்றோ அல்லது தொலைபேசியில் அழைத்தோ, தகவலின் உண்மைத் தன்மையை உறுதி செய்து கொள்ள முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# மோட்டார் சைக்கிள் மீது பஸ் மோதி இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணம்

## மன்னாரில் சோகம்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் – முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருங்கன் ரயில் கடவைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் மீது தனியார் பஸ் மோதி இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மன்னாரில் இருந்து சென்ற தென் பகுதியைச் சேர்ந்த தனியார் பஸ்ஸும் வவுனியாவில் இருந்து முருங்கன் வீதி நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் முருங்கன் – கற்கிடந்தகுளம் கிராமத்துக்கிடையில் உள்ள ரயில்வே கடவைப் பகுதியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் உயிரிழந்தவர் நானாட்டான் பிரதேசத்தில் உள்ள சாளம்பன் நாகசெட்டி கிராமத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் தீபன் (வயது – 35) என்ற இளம் குடும்பஸ்தர் எனத் தெரியவந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக முருங்கன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# மடுமாதா தேவாலய ஆடிமாதத் திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமானது

வரலாற்று சிறப்புமிக்க மன்னார் மடுமாதா தேவாலயத்தின் ஆடிமாத திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

மன்னார் மறைமாவட்ட ஆயர், கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் நேற்று மாலை 5.45 அளவில் கொடியேற்றம் நடைபெற்றது.

கொடியேற்றத்தில் மடு தேவாலயத்தின் பரிபாலகர் அருட்தந்தை ஞானபிரகாசம், மன்னார் மறைமாவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பக்தர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதுடன், மடு அன்னையின் ஆசிர்வாதமும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

எதிர்வரும் முதலாம் திகதி வரை நவநாள் ஆராதனைகள் இடம்பெறவுள்ளன.

முதலாம் திகதி வெஸ்பர் ஆராதனை இடம்பெறவுள்ளதுடன், இரண்டாம் திகதி காலை நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வருகை தரும் ஆயர்கள் தலைமையில் திருவிழா கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களை – அதனால் எழக்கூடிய நெருக்கடிகளை – முகம் கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயார் என்றால், அவர் அதைச் செய்யலாம். அந்த அரசியல் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் துணிச்சல் அவருக்கு இருக்கின்றதா என்பதுதான் இப்போது உள்ள கேள்வி.

அப்படி அரசியல் துணிச்சல் இருந்தாலும், இந்த விடயங்களை ஒப்பேத்தி முடிக்கப் போதிய கால அவகாசம் உள்ளதா என்பதும் கேள்வியே.

ஜனாதிபதியின் தற்போதைய பதவி காலத்தை மேலும் ஒரு வருடம் நீடிக்கும் அரசமைப்பு திருத்தப் பிரேரணை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, வர்த்தமானியில் அறிவிக்கப்பட வேண்டும். அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் பொதுமக்கள் ஆட்சேபம் கிளப்புவதானால் அதற்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அதற்குப் பின் உயர்நீதிமன்றம் அத்தகைய மனுக்களை விசாரித்து, பரிசீலித்து, தனது முடிவை அறிவிக்க வேண்டும். அப்படி ஜனாதிபதியின் பதவியை நீடிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் பெறப்பட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தால் அந்த முயற்சி – நகர்வு – அதோ கதிதான். அப்படியில்லாமல் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் நிறைவேற்றினால் போதும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தால் அதன் பிரகாரம் நாடாளுமன்றத்தில் அந்தப் பிரேரணையை விவாதித்து நிறைவேற்ற வேண்டும்.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் கருத்துப்படி பார்த்தால், இவற்றையெல்லாம் அடுத்த 23 நாள்களுக்குள் முடிக்க வேண்டும். அதுதான் ரணில் தரப்புக்கு கிட்டியுள்ள கால அவகாசம். இந்தக் குறுகிய அவகாசத்துக்குள் மேற்சொன்ன வேலைகளையெல்லாம் செய்து – ஒப்பேற்றி – முடிக்க முடியுமா என்பதுதான் கேள்வி.

ஏனெனில் பேராசிரியரின் கருத்துப்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிடுவதற்கு இன்னும் ஆக 23 நாள்களே உள்ளன.

அதற்கிடையில் –

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய பதவிக்காலத்தை ஓராண்டுக்கு நீடிக்கும் உத்தேசத் திட்டப்படி அதற்கான அரசமைப்பு மாற்றம் அந்தக் காலகட்டத்துக்குள் செய்யப்பட வேண்டும். செய்யப்படாவிட்டால் அடுத்த ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கையை தேர்தல் ஆணைக்குழு உத்தியோகபூர்வ அறிவிப்போடு ஆரம்பித்து விடும்.

அதற்கிடையில், அத்தகைய அரசமைப்புத் திருத்தம் சட்டமாவதற்கு வாய்ப்பு இல்லை. அதனால் ரணிலின் பதவிக் காலத்தை மேலும் ஓராண்டு நீடிக்கும் திட்டம் சரிப்பட்டு வராது போலவே தோன்றுகின்றது என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் உறுதியாகக் கூறுகின்றன.

## ரணிலுக்கு மொட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரணில் விக்கிரமசிங்கவுக்கு மொட்டுக் கட்சி ஆதரவு வழங்காது என்று நாமல் மறைமுகமாகத் தெரிவித்துள்ளார் என உணர முடிகின்றது.

மொட்டுக் கட்சியில் இருந்து விலகி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் ஏனைய கட்சிகளுடனும் இணைந்தவர்கள் தமக்குத் தேவையில்லை என்றும், அவர்களுடன் கூட்டணி ஏற்படுத்தப்படமாட்டாது என்றும் நாமல் ராஜபக்ஷ எம்.பி. ஊடகங்களிடம் மேலும் கூறினார்.

## ராஜபக்ஷக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக நீங்கள், ராஜபக்ஷக்களின் மொட்டுக் கட்சியின் பின்னால் செல்வதையும், மொட்டுவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவை வாரம் தோறும் சந்திப்பு நடத்துவதையும் நாம் விரும்பவில்லை.

நாம் வேண்டுமா அல்லது மொட்டுக் கட்சி வேண்டுமா என்று நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.

மொட்டின் உறவை நீங்கள் துண்டிக்காவிட்டால் நாம் சுயாதீனமாகச் செயற்படுவோம்.” – என்று நிமல் லான்சா அணி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் வெற்றிக்காகக் கட்சிகளை வளைத்துப் போட்டு கூட்டணி அமைக்கும் பணியை நிமல் லன்சா அணி மேற்கொண்டு வருகின்றது.

மொட்டுடன் ரணில் அதிகம் நெருங்கிச் செல்வதை நிமல் லன்சா அணி விரும்பாததால் இப்போது ரணில் – லன்சா கூட்டணிக்குள் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

## பொன்சேகாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டுள்ளது.

இதற்காகக் கட்சியின் விசேட மத்திய செயற்குழுக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு ஆளுங்கட்சியில் இருந்து நேரம் பெற்றுக்கொண்டமை, ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கட்சி எடுத்துள்ள முடிவுக்கு எதிராகச் செயற்படுகின்றமை உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டே சரத் பொன்சேகா எம்.பிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியில் இருந்து தன்னை நீக்கக்கூடாது எனச் சரத் பொன்சேகா நீதிமன்றம் ஊடாக இடைக்காலத் தடை உத்தரவு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.






# மின்சாரக் கட்டணத்தில் திருத்தம் ஜூலை 15 இல் விசேட அறிவிப்பு

மின்சாரக் கட்டணத்தில் திருத்தம் செய்வது தொடர்பில் எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதி அறிவிக்கப்பட உள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணத்தில் திருத்தங்கள் செய்வது தொடர்பில் பொதுமக்களிடம் எழுத்து மூலமாக கருத்துக்களைப் பெறும் நடவடிக்கை எதிர்வரும் ஜூலை 8 ஆம் திகதி வரையில் முன்னெடுக்கப்பட உள்ளதாக ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பொதுமக்களிடம் கருத்து கோரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன.

மின்சாரக் கட்டணங்களை திருத்துவது தொடர்பில் இலங்கை மின்சார சபை முன்மொழிந்துள்ள யோசனைகள் அண்மையில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறு கல்வி அமைச்சு பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை

மாணவர்கள், பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் அதிபர், ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கல்வி அமைச்சு பாதுகாப்பு அமைச்சிடம் கோரியுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளரினால் பாதுகாப்பு செயலாளரிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி சாரா பணியாளர்கள் தங்களது தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுக்கின்ற நிலையில் இந்தம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பல்கலைக்கழகங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சிடம், கல்வி அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

# திருக்கோணேஸ்வரம் கோயில் அருகில் கசிப்பு விற்பனை: கிழக்கு ஆளுநர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஆறு.திருமுருகன் கோரிக்கை

“திருகோணமலை, திருக்கோணேஸ்வரம் கோயில் அருகில் உத்தரவின்றி அமைக்கப்பட்ட பெட்டிக்கடையில் கசிப்பு விற்பனை சம்பவம் அறிந்து சைவ மக்கள் மிகுந்த கவலையடைந்துள்ளனர். இந்த விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.”

– இவ்வாறு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“திருகோணமலை, திருக்கோணேஸ்வரம் ஆலயம் அருகே பக்தர்கள் கோயில் வரும் பாதையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பெட்டிக்கடையொன்றில் கசிப்பு குடிவகை விற்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டு ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விடயம் சைவமக்களுக்கு அதிர்ச்சியையும் கவலையையும் தரும் செய்தியாகும்.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கடைகளை அகற்றுமாறு சைவ நிறுவனம்கள் தொடர்ந்து வேண்டுதல் விடுத்த போதும்




இதுவரை எவரும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

தங்களிடமும் இவ்விடம் தொடர்பாக முறையிட்ட போதும் இதுவரை பயன்கிட்டவில்லை.

புனிதமான வரலாற்றுத் தலம் அருகே இவ்வாறான சம்பவம் நடைபெறுவது அருவருக்கத்தக்க செயலாகும்.

தாங்கள் இதற்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்த உடன் பெட்டிக்கடைகளை நீக்க நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும்.”

– என்றுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வேடதாரியின் விஷக் கருத்து

ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டுத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்களுக்கு நீதி வேண்டி - நியாயம் கேட்டு - குரல் எழுப்பி வருகின்றார் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்.

தமது மக்களுக்காக அவர் குரல் எழுப்புகின்றார் என்ற ஒரு பொதுவான கருத்தியலில் அவரது கருத்துக்களை நாம் மதித்தாலும், ஒரு மதத் தலைவராக நீதி கோரும் அருகதை - தகுதி - அவருக்குக் கிடையாது என்பதை இப்பத்தியில் அவ்வப்போதும் சுட்டிக்காட்டியே வந்திருக்கிறோம்.

நீதி - நியாயம் - மனிதாபிமானம் போன்றவற்றை நிலை நாட்டுவதற்காகக் குரல் எழுப்புவதில் நேர்மையாளராக அவர் நடக்கவில்லை. 'ஒரு கண்ணில் வெண்ணையும் மறு கண்ணில் சுண்ணாம்பும் தடவும்' பக்கச் சார்பு போக்கிலேயே அவர் நடந்தார். நடக்கின்றார். அதனால் 'வெள்ளை உடையில் அவர் ஒரு வேடதாரி' என்று நாம் இப்பத்தியில் தொடர்ந்து விமர்சித்து வருகின்றோம்.

இந்த இலங்கைத் தீவில் பல பத்தாயிரம் தமிழர்கள் அநீதியாக - கோரமாக - கொடூரமாக - கொன்றொழிக்கப்பட்டு, படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டு, ஒரு சந்ததியே அழித்து நிர்மூலமாக்கப்படும் குரூரம் இந்தத் தீவில் அரங்கேறியபோது அந்த அநியாயத்திற்காகக் குரல் எழுப்ப மறுத்த வெள்ளை உடை போர்த்த வேடதாரி அவர்.

இப்போது சுமார் முந்நூறு பேர் வரைக் கொல்லப்பட்டு, ஐந்நூறு பேர் வரை காயப்படுத்தப்பட்ட ஒரு தொடர் தாக்குதலுக்கு அதிகம் கூச்சலிடுகின்றார். அப்படி கூச்சலிடுவதற்கு - நீதி கேட்பதற்கு - உரிய தகுதியும் நியாயமும் அவரது வெள்ளை ஆடைக்கு இப்போது இல்லவே இல்லை என்பதை மீண்டும் மீண்டும், அவ்வப்போது, இப்பத்தியில் சுட்டிக்காட்டியே வந்திருக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட - பரிதாபத்துக்குரிய - பாடுகளைச் சுமக்கின்ற - மக்களுக்காகக் குரல் எழுப்ப வேண்டும், உழைக்க வேண்டும் என்ற இறைமகன் இயேசுவின் வழிகாட்டலை ஈழத் தமிழர்கள் விடயத்தில் பின்பற்றத் தவறி, அதற்கு மாறாக - முரணாக - அடக்கு முறையாளர்களுடன் அணிவகுத்து நின்று, அவர்களின் வெறியாட்டத்துக்கு ஆசி வழங்கி, சிலாகித்த பேராயர் அவர். அதனால் இயேசுவின் பெயரால் ஆசீர்வதிக்கும் மாண்பற்றவர் என்பதை பகிரங்கமாகவே வெளிப்படுத்தி வந்திருக்கிறோம்.

இப்போதும் தமது குறுகிய மதவாத சிந்தனையால் நாட்டின் அரசியலுக்குள் தலையிட்டு குழப்பகரமான கருத்துக்களை அவர் முன் வைக்க முயலுகின்றார்.

இலங்கை - இந்திய தேசங்களுக்கு இடையில் தரைவழித் தொடர்புகளை ஏற்படுத்தும் திட்டம் இலங்கையின் இறையாண்மையைப் பேராபத்துக்கு உட்படுத்தும் என்று பேரினவாத பௌத்த - சிங்களவர்களை உசுப்பேத்தும் காரியத்தை ஆரம்பித்திருக்கின்றார் இந்த வெள்ளை அங்கி வேடதாரி.

அப்படி இலங்கையையும் இந்தியாவையும் தரை வழியாக இணைப்பது இலங்கையைத் தமிழ்நாட்டின் பகுதியாக மாற்றி விடும் என்று தெற்கு மக்களிடையே உணர்ச்சியை தட்டித் தூண்டி விடுகிறார் இந்த மதவாதி.

"இந்த நாட்டின் பகுதிகளை தென்னிந்திய ஆக்கிரமிப்பாளர்கள் அவ்வப்போது ஊடுருவிக் கைப்பற்றி ஆட்சி புரிந்து வந்திருப்பது நமது சரித்திரத்தில் நிறைய தடவைகள் இடம்பெற்றிருக்கின்றது. இந்தப் பிரதேசங்களை விடுவிப்பதற்கு சிங்கள மன்னர்கள் பல தடவைகள் படைகள் திரட்டிப் போராட வேண்டி நேர்ந்தது. இப்போதைய அரசு தமிழ்நாட்டையும் இலங்கையையும் தரைவழிப் பாலத்தால் இணைக்கப் பிரேரித்திருக்கின்றது. இது கடைசியில் இலங்கையைத் தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக்கும் நடவடிக்கையாகவே கொண்டு போய் முடிக்கும்." - என்று எச்சரித்திருக்கின்றார் அவர்.

கடைசியாக இந்தியப் படைகள் இலங்கையை ஆக்கிரமிக்க வெற்றிலை வைத்தவர்களே கொழும்பு அரசினர்தான். அதே ஆக்கிரமிப்பு எதிராக உயிர் கொடுத்துப் போராடியவர்கள் பேராயர் குறிப்பிடும் சிங்களத் தரப்பினர் அல்லர். இலங்கைத் தீவின் சுதேசிய வீரர்களான தமிழ்ப் புலிகள்தான். அப்போதும் புலிகளுக்கு எதிராகவே கருத்தியலை வெளியிட்டவர்தான் இந்த மதவாதி.

இலங்கையை இந்தியா ஆக்கிரமிக்க வேண்டுமானால் இந்த நவீன தொழில்நுட்ப வசதிக் காலத்தில் அதற்காக தரை வழிப்பாதை அவசியமில்லை. அது இல்லாமலேயே இந்திய உபகண்டம் இலங்கைத் தீவை கபளீகரம் செய்து விடலாம்.

கொழும்பின் பௌத்த பேரினவாதமும், புதுடில்லியின் இந்துத்துவாவும் நகமும் சதையுமாக ஒன்றுபட்டு நிற்பதை இந்த மதவாதியால் பொறுக்க முடியவில்லை. நான்முகச் சிங்கமும் தர்மசக்கரமும் ஒன்றுபட்டு நிற்பது சிலுவைக்கு பொறுக்கவில்லை. அவ்வளவுதான்.

# தென் கொரிய மின்கல உற்பத்தி தொழிற்சாலை தீ விபத்தில் 22 பேர் உயிரிழப்பு, 7 பேர் காயம்





தென் கொரியாவிலுள்ள இலித்தியம் மின்கல உற்பத்தி தொழிற்சாலை ஒன்றில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்த தீ விபத்தானது தென் கொரிய தலைநகர் சியோலில் அமைந்துள்ள தொழிற்சாலையில்நேற்று இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தீ விபத்தில் சிக்கி 22 பேர் உயிரிழந்துள்ளனர், 7 பேர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் 35,000 அலகுகளை கொண்ட தொழிற்சாலையின் களஞ்சிய பகுதிக்குள் மின்கலங்கள் வெடித்ததை அடுத்து தீப்பரவல் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தீ விபத்து ஏற்படுவதற்கு முன்பு தொழிற்சாலையில் மொத்தம் 100 பேர் வரையில் பணிபுரிந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தீ விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரஷ்யாவில் சோதனைச் சாவடிகள் மீது துப்பாக்கிச் சூடு; உயிரிழப்பு அதிகரிப்பு





ரஷ்யாவின் வட காக்காஸ் குடியரசான தாகெஸ்தானில் ஆயுததாரிகள் பொலிஸ் சோதனைச் சாவடிகள் மற்றும் தேவாலயங்களை இலக்கு வைத்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரிகள் உட்பட 19 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தாக்குதலை நடத்திய 6 துப்பாக்கிதாரிகளும் பதில் தாக்குதலின்போது பலியாகியுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதவிர, குறைந்தது 16 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பென்ந்தகோஸ் மதப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட திருவிழா நடைபெற்ற வேளை இந்த தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

ஆயுததாரிகள் திட்டமிட்டு ஒரே நேரத்தில் இரு நகரங்களில் இந்த தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.தாக்குதல்களின் பின்னர் தேவாலயங்கள் தீயிடப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டவர்களில் ஒரு பாதிரியாரும் அடையாளம் காணப்பட்டுள்ளார் என தேவாலய தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த பிரதேசங்களில் முன்னர் இஸ்லாமிய பயங்கரவாதிகளினால் பல தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் அதிகாரபூர்வமாக அடையாளம் காணப்படாத போதிலும், துப்பாக்கிதாரிகளில் செர்கோகலின்ஸ்கி மாவட்ட தலைவரின் இரு புதல்வர்கள் உள்ளடங்குகின்றன என ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவர்கள் தற்போது உக்ரைனில், ரஷ்யாவிற்கு எதிரான போரில் நேரடியாக ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹமாஸுடன் போர் தொடரும் இஸ்ரேல் பிரதமர் தெரிவிப்பு

ஹமாஸுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டாலும், போர் தொடரும் என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான யுத்த நிறுத்த யோசனை ஒன்றிற்கு இஸ்ரேல் சம்மதித்திருப்பதாக அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்து நெதன்யாகுவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை கவனத்தை ஈர்த்துள்ளது.

“பாலஸ்தீனத்துடனான யுத்தம் நிறைவடையும் நிலைக்கு வந்திருக்கிறது. எனினும் ஹமாஸுடன் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டாலும் யுத்தம் தொடரும்” என அவர் அறிவித்துள்ளார்.

அதேநேரம், அல்-மவாசி பாதுகாப்பு வலயத்தின் எல்லைக்குள் இஸ்ரேலின் யுத்த தாங்கிகள் நுழைந்திருப்பதாக



அங்குள்ள பொதுமக்கள் தெரிவித்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# விக்கிரவாண்டி இடைத்தேர்தல்:

# தி.மு.க, பா.ம.க, நா.த.க. உட்பட 29 வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டன

## 35 மனுக்கள் நிராகரிப்பு

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க, பா.ம.க, நாம் தமிழர் உள்ளிட்ட முக்கிய கட்சியின் வேட்புமனுக்கள் உட்பட 29 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன எனவும் 35 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தல் ஜூலை 10 ஆம் திகதி நடைபெறுகிறது. இதையொட்டி தேர்தல் ஆணையம் பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மாதம் 14 ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் தொடங்கியது. 21 ஆம் திகதி மொத்தம் 64 மனுக்கள் பெறப்பட்டன. அவ்வாறு பெறப்பட்ட மனுக்கள் மீதான பரிசீலனை நேற்று காலை 11 மணியளவில் விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகர் தலைமையில் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் பரிசீலனை செய்யும் பணிகளை மேற்கொண்டனர்.

மொத்தம் 64 மனுக்கள் அளித்தவர்களின் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பரிசீலனை நடைபெற்றது. பரிசீலனையில் தி.மு.க, பா.ம.க, நாம் தமிழர் உள்ளிட்ட முக்கிய கட்சி மனுக்கள் உட்பட 29 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன எனவும் 35 மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றன என்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

சுயேச்சை வேட்பாளர்களான செல்வி, விநாயகம், இசக்கிமுத்து ,கோவிந்தராஜ், முத்துக்குமார் சாமிநாதன் ஆகியோர் உதவி தேர்தல் அலுவலரின் செயல்பாடுகளை எதிர்த்து அலுவலகத்தில் முன்பு தர்ணாவில் ஈடுபட்டனர்.

# கள்ளச் சாராய மரணங்கள் குறித்து ஆளுநரிடம் மனு அளிக்கவுள்ளோம்

## கள்ளக்குறிச்சியில் பழனிசாமி ஆவேசம்






“கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய சம்பவத்துக்கு பொறுப்பேற்று முதல்வர் ஸ்டாலின் இராஜினாமா செய்யவேண்டும். ஏற்கனவே தமிழகத்தில் கஞ்சா போதை விற்பனை குறித்து தமிழக ஆளுநரிடத்தில் மனு அளித்திருந்தோம், தற்போது கள்ளச் சாராய சம்பவத்தால் 58 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து தமிழக ஆளுநரை சந்தித்து மனு அளிக்கவுள்ளோம்.”

– இவ்வாறு அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான பழனிசாமி தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சியில் மெத்தனால் கலந்த கள்ளச் சாராயம் அருந்தி 58 பேர் உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து அ.தி.மு.க. சார்பில் நேற்று கள்ளக்குறிச்சியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு கள்ளக் குறிச்சி அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் குமரகுரு தலைமைவகித்தார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில்,

“கள்ளச் சாராய உயிரிழப்புகளுக்கு தி.மு.க. அரசு பொறுப்பேற்க வேண்டும். ஆட்சிக்கு வந்து 3 ஆண்டுகளான நிலையில் தமிழகம் முழுவதும் போதைப் பொருள்கள், கள்ளச் சாராய விற்பனையால் அப்பாவி மக்கள் உயிரிழப்புகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

கள்ளக்குறிச்சி சம்பவத்தின் எதிரொலியாக தமிழகம் முழுவதும் கடந்த 3 நாள்களில் கள்ளச் சாராய ஒழிப்பு சோதனை நடத்தி 876 சாராய வியபாரிகள் மீது 861 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 4657 லிட்டர் கள்ளச் சாராயம் மற்றும் மூலப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த சம்பவம் நடைபெறாமல் இருந்திருந்தால், இத்தகையை சோதனை நடைபெற்றிருக்காது. மேலும் பலர் எதிர்காலத்தில் உயிரிழந்திருக்கக் கூடும்.

ஒரே இடத்தில் 28 பேரின் உடல்கள் எரியூட்டப்பட்டமை தான் திராவிட மாதிரி அரசின் சாதனை. இந்த ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களால் போதைப் பொருள்கள் ஒழிக்க முடியவில்லை. போதைப்பொருள்கள் சாக்லேட், திரவம், ஊசி வடிவத்தில் புழங்குகிறது. இதனால் இளைஞர்கள் மாணவர்கள் சீரழிந்து கொண்டிருக்கிறார்கள். கஞ்சா, கள்ளச் சாராய விற்பனைகளால் உயிகள் பறிபோகும் சூழல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் பொறுப்பேற்று தமிழக முதல்வர் ஸ்டாலின் இராஜினாமா செய்யவேண்டும்.

ஏற்கனவே தமிழகத்தில் கஞ்சா போதை விற்பனைக் குறித்து தமிழக ஆளுநரிடத்தில் மனு அளித்திருந்தோம், தற்போது கள்ளச் சாராய சம்பவத்தால் 58 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து தமிழக ஆளுநரை சந்தித்து மனு அளிக்கவுள்ளோம்”– என்றார்.



# ‘கேம்பிரிட்ஜ் காலநிலை ஆய்வு’ சுய கற்கை நெறியை இலங்கை மாணவர்கள் இலவசமாக கற்கும் வாய்ப்பு

தெற்காசியாவில் அதிநவீன எதிர்காலத்தை நோக்கமாகக் கொண்ட கல்வி முறையை உருவாக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில், இலங்கை மாணவர்களுக்கு ‘Cambridge Climate Quest’ சுயக் கற்கை நெறியை இலவசமாக கற்கும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

இலங்கையில் அவுஸ்திரேலிய பிளிண்டர்ஸ் பல்கலைக் கழகத்தின் கிளை வளாகம் ஒன்று நிறுவப்பட்டுள்ள நிலையில், இந்த வாய்ப்பு இலங்கை மாணவர்களுக்கு கிட்டியுள்ளது.

அதற்கமைய, தரம் 8 -12 வரை கல்வி கற்கும் இலங்கை மாணவர்களுக்கு, 3 மொழிகளிலும் “கேம்பிரிட்ஜ் காலநிலை குவெஸ்ட்“ (Cambridge Climate Quest) சுயக் கற்கை நெறியை இலவசமாகக் கற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, காலநிலை மற்றும் நிலைத்தன்மை தொடர்பான அறிவை இந்த நாட்டு இளைஞர்களுக்கு வழங்குவதற்கான வாய்ப்பும் கிட்டியுள்ளது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சீடு மற்றும் மதிப்பீடுகளின் பணிப்பாளர் கிறிஸ்டின் ஓஸ்டன், அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து, இது தொடர்பாக கலந்துரையாடியதோடு, இலங்கையின் புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு தனது முழு ஆதரவையும் வழங்குவதாகவும் தெரிவித்தார்.

காலநிலை மற்றும் நிலைத்தன்மை ஆகிய துறைகளில் முன்னணியில் இருக்கும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சித் துறையான ‘Cambridge Zero’ கல்வியாளர்களால் இந்தப் பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் வெற்றிகரமாக பாடநெறியை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு கேம்பிரிட்ஜ் சான்றிதழும் வழங்கப்படும்.

அத்துடன், இலங்கை மாணவர்களுக்கான சர்வதேச மட்ட உயர்கல்வி வாய்ப்புகளை மேம்படுத்தும் வகையில் அவுஸ்திரேலியாவில் உள்ள பிலிண்டர்ஸ் பல்கலைக்கழகத்தின் கிளை வளாகமொன்றும் இலங்கையில் நிறுவப்படவுள்ளது.

பிலிண்டர்ஸ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் கொலின் ஸ்டிர்லிங் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து இது குறித்து கலந்துரையாடினார்.

இலங்கையில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த புதிய வளாகமானது பொறியியல், தகவல் தொழில்நுட்பம், வணிக முகாமைத்துவம், நிதி, சந்தைப்படுத்தல் மற்றும் மருத்துவம் ஆகிய துறைகளில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டங்களை வழங்கும்.

இந்த சந்திப்புக்களில் ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் தினுக் கொழும்பு, கேட்வே சர்வதேச பாடசாலை குழுமத்தின் தலைவர் கலாநிதி ஹர்ஷ ஆகியோரும் கலந்துகொண்டனர்.



# குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் பதவியை இராஜினாமா செய்வேன்

## அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

**"2024 ரி 20 உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிக்காக சென்ற இலங்கை கிரிக்கெட் அணி, ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால்அமைச்சர்பதவியைஇராஜினாமா செய்வேன்."**

**- இவ்வாறு சுற்றுலாத்துறை, காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சுதந்திர இலங்கையின் 75 வருட வரலாற்றில், மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி உரிமையை வழங்குவதற்கு ஜனாதிபதி ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட முதல் நடவடிக்கையாக "உறுமய" காணி உறுதிப்பத்திரம் வழங்கும் திட்டத்தைச் சுட்டிக்காட்ட முடியும். பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் இதுவரை 50,000 இற்கும் மேற்பட்டோருக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. உறுமய திட்டத்தின் மூலம் 20 லட்சம் முழு உரிமையுள்ள காணி உறுதிகள் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், மக்களிடம் இது பற்றிய சரியான புரிதல் இல்லை என்று தெரிகிறது. அதனாலேயே இவர்களது மானியப் பத்திரங்களை பிரதேச செயலகத்தில் ஒப்படைத்து காணி உறுதிப் பத்திரங்களாக மாற்றும் செயற்பாடுகள் மந்தமான நிலையில் நடைபெறுகின்றன. இது குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் நடமாடும் சேவையை இந்த வாரம் முதல் ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், பேரூந்துகள் மூலம் பிரதேச செயலக மட்டத்தில் மக்களுக்கு அறிவித்து உறுமய காணி உறுதிப்பத்திரங்கள் விநியோகத்தை துரிதப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் வடமேல் மாகாணத்தில் 12,000 காணி உறுதிப்பத்திரங்களும், மாத்தறை மாவட்டத்தில் 12,000 காணி உறுதிப்பத்திரங்களும் வழங்கும் பணிகள் அடுத்த சில தினங்களில் நிறைவடையும்.

சுற்றுலாத் துறையைப் பற்றி நாம் கூறினால், இந்த ஆண்டு 990,000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் எமது நாட்டிற்கு வருகை தந்ள்ளனர். இலவச விசா வழங்கும் முறை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையும் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. அதன்பிறகு இலவச விசா வழங்கும் முறையை அமுல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் மூலம் சுற்றுலாத்துறையின் விரைவான வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் இதுவரை 05 உலகளாவிய விளம்பரத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. சீனா, ஜப்பான், இந்தியா மற்றும் ஐரோப்பாவிற்கு தனித்தனியான உலகளாவிய விளம்பர திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகள் மத்தியில் இலங்கையை பிரபலப்படுத்த . 'Must Visit" பெயரில் புதிய வேலைத்திட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஊக்குவிப்புத் திட்டங்களின் காரணமாக, உலகின் முதல் பத்து சுற்றுலாத் தலங்களுக்குள் இலங்கையையும் கொண்டு வர முடிந்துள்ளது. இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் 33 வீதம் பேர் மீண்டும் இலங்கைக்கு வருகை தருகின்றனர். அந்தச் சூழல் சுற்றுலாத் துறையின் ஒரு நல்ல போக்காகும். எனவே, கடல்சார் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதேநேரம்




திருகோணமலை மற்றும் அறுகம்பே பகுதிகள் கடல்சார் சுற்றுலாத் துறையின் கேந்திர மையமாக மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் வகையில் விரைவில் உள்நாட்டு விமான சேவையொன்றை ஆரம்பிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், புதிய விளையாட்டு சட்டம் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட உள்ளது. இலங்கையில் 73 விளையாட்டுகள் உள்ளன. புதிய கிரிக்கெட் சட்டம் அனைத்து விளையாட்டுகளுக்கும் செல்லுபடியாகும். கிரிக்கெட் விளையாட்டிற்கு பல்வேறு கருத்தகளைத் தெரிவித்து வீரர்களின் மன நிலையை பாதிக்கும் வகையில் சில குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த வருடம் ரி 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் போது இலங்கை வீரர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதாக சிலர் குற்றம்சாட்டி வருகின்றனர். குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் நான் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்யத் தயார். விளையாட்டை அரசியலில் இருந்து விடுவிக்க தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய விளையாட்டுச் சட்டத்தின் மூலம் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் கூட எந்த விளையாட்டு சங்கத்திலும் பதவி வகிக்க முடியாது.

இலங்கை பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியானது சர்வதேச கிரிக்கெட் பேரவையால் மேற்கொள்ளப்படும் ஒரு பணியாகும். எனவே, அந்த விடயத்தில் நாங்கள் தலையிடுவதில்லை. சர்வதேச கிரிக்கெட் பேரவையிடம் இருந்து நிதியைப் பெற்று, பகல் – இரவு போட்டிகளை நடத்தும் திறன் கொண்ட மற்றொரு மைதானத்தை நிர்மாணிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. உலகக் கிண்ணம் போன்ற போட்டிகளை ஒரே நாட்டில் நடத்துவதற்கு, பகல் – இரவுப் போட்டிகளை நடத்தக்கூடிய சர்வதேச அளவிலான 05 மைதானங்கள் அந்த நாட்டில் இருக்க வேண்டும்.

மேலும், ஒரு மைதானத்தை நிர்மாணிப்பதன் மூலம் இந்த நாட்டில் அந்தத் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், 2026 கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டியை இலங்கையில் மாத்திரம் நடத்தக் கூடிய வாய்ப்பைப் பெறவும் நாம் எதிர்பார்க்கின்றோம். அதேபோன்று பாடசாலை ரக்பி வீரர்கள் 400 பேருக்கு காப்புறுதி வழங்கப்பட்டு அந்தப் பிள்ளைகளை பராமரிக்கும் வகையில் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. விளையாட்டு சக்தி திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 850 விளையாட்டு வீரர்களுக்கு மாதாந்தம் 10,000 ரூபாவை போசாக்கு கொடுப்பனவாக வழங்கவும் அரசாங்கம், அதிக செயல்திறன் கொண்ட அறுபது வீரர்களை தேர்வு செய்து அவர்களுக்கு மாதம் 50,000 ரூபா வழங்கவும் அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது."– என்றார்.



# பாகிஸ்தான் தூதர் நேற்று முசலி விஜயம் வாழ்வாதார உதவிகளும் வழங்கி வைப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

“முஸ்லீம் ஹாண்ட் – சிறிலங்கா“ அமைப்பின் ஒழுங்கமைப்பில் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரகத்தின் அனுசரணையில் மன்னார் முசலி பிரதேச செயலக பிரிவை சேர்ந்த – வறுமை கோட்டிற்கு உட்பட்ட – குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை இடம் பெற்றது.

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் பகீம் முல் அசீஸின் பங்குபற்றுதலுடன் முசலி பிரதேச செயலக பிரிவில் உள்ள மரிச்சுக்கட்டி பகுதியை சேர்ந்த 150 குடும்பங்களுக்கு மேற்படி வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 5 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு தையல் இயந்திரமும், 150 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களும் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் சஹிபுல் அசிஸினால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் உள்ளடங்கலாக பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரக உத்தியோகத்தர்கள், முசலி பிரதேச செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர், “முஸ்லிம் ஹாண்ட் – சிறிலங்கா“ பிரதிநிதிகள் உட்பட பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

மேலும் மரிச்சுக்கட்டி பகுதியில் 50 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு கலப்பு விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ள நிலையில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் ஆராய்ச்சி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.













# தலவாக்கலை பஸ் நிலையத்தின் கூரையில் தேன் குளவியின் கூடு

(மஸ்கெலியா நிருபர்)

தலவாக்கலை பஸ் நிலையக் கட்டடத்தில் தேன் கூடு கட்டப்பட்டுள்ளதால் பயணிகள் மற்றும் தலவாக்கலை பிரதேசவாசிகள் மிகவும் அச்சம் அடைந்து உள்ளனர்.

தேன் கூட்டைச் சுற்றி காகங்கள் மற்றும் புறாக்கள் பறக்கின்றன. கடும் காற்று வீசுகிறது. இதனால் கூட்டுக்கு அனர்த்தம் நேர்ந்து தேனீக்கள் கலைந்தால் விபரீதம் ஏற்படும் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பஸ் நிறுத்தம் மற்றும் அதனை சுற்றியுள்ள கடைகளுக்கு பள்ளி மாணவர்கள் உட்பட ஏராளமானோர் தொடர்ந்து சென்று வருகின்றனர். தேன்கூடு இருப்பதால் அங்கு வருபவர்கள் பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர் எனவும், தலவாக்கலை நகர மக்கள் தெரிவிக்கின்றனர்.

தலவாக்கலை நகர மக்கள் பாதுகாப்பு கருதி தேன் கூட்டை விரைவில் அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

# வடக்கு மாணவர்களுக்கு அரிய வாய்ப்பாக 'Education யாழ்ப்பாணம்' 3 ஆவது அமர்வு

ICFS (International Centre for Foreign Studies) சர்வதேச வெளிநாட்டு கற்கை மையம் ஏற்பாடு செய்துள்ள 'Education யாழ்ப்பாணம்" மூன்றாவது அமர்வு 29 ஜூன் 2024 சனிக்கிழமை, வவுனியா பொது நூலகத்திலும் மறுநாள் 30 ஜூன் 2024 ஞாயிற்றுக்கிழமை - யாழ்ப்பாணம் பொது நூலக - கேட்போர் கூடத்திலும், இரு நாள்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு வடக்கு மாகாணத்தில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து, கனடா, ஜேர்மனி மற்றும் மால்டா ஆகிய நாடுகளில் உள்ள கல்வி தொடர்பான தெரிவுகளையும், விருப்பங்களையும் ஆராய்வதற்கான வாய்ப்புகளை வழங்கும் முயற்சியின் மூன்றாவது கட்டமாகும்.

'Education - யாழ்ப்பாணம்" நிகழ்ச்சித் திட்டத்தின் சிறப்பு அம்சம் தலைநகர் மற்றும் கற்கை வசதிகளை கொண்ட பகுதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கல்வி வாய்ப்புகளை, வடக்கு மாகாணத்திலுள்ள தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுடன் பகிர்ந்து கொள்வதே யாகும். இலங்கையர் அனைவருக்கும் சமமான கல்வி கிடைக்க ICFS எப்போதும் உறுதிபூண்டு செயலாற்றி வருகின்றமை குறிப்பிடக்கூடியதாகும்.

இங்கு முதன்மைப்படுத்தப்படுகின்ற கற்கைகளுக்காக நாடுகள் பாரிய பணச் செலவுகளை ஏற்படுத்தாத வகையிலும், நிதி பங்களிப்புகள் சலுகை அடிப் படையில் வசதிகளை ஏற்படுத்தும் வகையிலும் அறிமுகப் படுத்துகின்றன. குறிப்பாக மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப் பரிசில்கள், விண்ணப்பதாரர்களின் வசதியைக் கருத்திற் கொள்வதுடன் இந்தச் சந்தர்ப்பம் ஒரு சொற்ப அளவிலேயே "Education யாழ்ப்பாணம்" மூலம் கிடைக் கும் சில தனித்துவமான வாய்ப்புகளாகும்.

இலங்கையில் தங்களுடைய குடும்பத்தை விட்டு வெளியேறத் திட்டமிடாத அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் Research Master options அவர்கள் சார்ந்து நிற்கின்றவர்களுடன் (Dependent Visa) இங்கிலாந்துக்குச் செல்லும் வாய்ப்பை அவர்கள் அறிமுகப்படுத்த முனைகின்றார்கள். அதே வேளை மால்டாவில் உயர் கல்விக்கான புதிய வாய்ப்பை Education யாழ்ப்பாணம் திட்டத்தின் ஊடாக இணைத்துக் கொள்ளும் மற்றொரு சிறப்பம்சமாகும். மாலடாவில் கல்வி செயற்பாடுகள் யாதெனில் மிகக் குறைந்த உத்தரவாதமான கல்விக் கட்டணத்தையும், ஷெங்கன் விசாவிற்கான அனுமதியினையும் வழங்குகிறது. இதன் மூலம் ஐரோப்பாவிற்குள் நீங்கள் தடம் பதிப்பதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுக்கிறது.

நுனரஉயவழைெ யாழ்ப்பாணம் முதலாவது அமர்வு 2024 மார்ச் 30-31 நடத்தப்பட்டது. தொடர்ந்து இரண்டாவது அமர்வு 2024 மே 30-31 யாழ்ப்பாணம் பொது நூலக - கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. இதன்போது பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களில் கற்பதற்கான வாய்ப்புகளை விண்ணப்பதாரர்களுக்கு வழங்கியது. இதனைத் தொடர்ந்து பெரும்பான்மையினரின் கோரிக்கைகளின் விளைவாக, அதில் கலந்து கொண்ட அனைவரின் விருப்பத் தேர்வுகளுடன் 'Education - யாழ்ப்பாணம்" மூன்றாவதுஅமர்வை ICFS நடாத்துகின்றது.

ICFS வடக்கில் உள்ள அனைத்து திறமையான மற்றும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இந்த அரிய வாய்ப்பை அதிகபட்சமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறது.

அங்கு நீங்கள் இது தொடர்பிலான தொழில் வல்லுநர்களைச் சந்தித்து ஜஊஒகுளு உடன் வெளிநாட்டில் கல்வியைத் தொடர உங்கள் எதிர்கால இலக்கை அடைவதற்கான வரைவை இங்கு சமர்ப்பிக்க முடியும். ICFS இன் இந்த செயலமர்வுக்கு எந்தவித நுழைவுக் கட்டணங்களும் அறவிடப்பட மாட்டா என்பதையும், ICFS இன் ஆலோசனைகளுக்கு எவ்வித கட்டண வசூலிப்பும் இல்லை (No consultant fees) என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. இது வடக்கில் உள்ள தகுதியான மாணவர்களுக்கு ஒரு விலைமதிப்பற்ற வாய்ப்பாக அமைகிறது என்பது குறிப்பிடத்தக்கது.




# மலையகத்துக்கு சகல உரிமைகளையும் கோரி
# மாத்தளை நகரில் சனியன்று நடந்த கவனவீர்ப்பு

**(ஆ.ரமேஸ்)**

மாத்தளை நகரில் கடந்த சனிக் கிழமை கவனவீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

"சகல உரிமைகளையும் உள்ளடக் கிய மலையகம்" எனும் தொனியில் பெருந்தோட்ட மக்களுக்கும் காணி உரிமை, வீட்டு உரிமை. மொழி உரிமை, அரசியல் உரிமை அடங்க லாக தொழிலாளர்களுக்கான சம்பளம் அதிகரிப்பு, பெண்களுக்கான உரிமை ஆகியவற்றை அரசாங்கம் வழங்க வேண்டும் என அரசாங்கம் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள், அரசி யல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்தக் கவன ஈர்ப்பு நடவடிக் கையை சமூக அபிவிருத்தி நிறுவகம் மாத்தளை நகரில் சனிக்கிழமை நடத் தியது.

இந்த கவன ஈர்ப்பு நடவடிக்கை யில் அரசியல்வாதிகள், கல்விமான்கள், சிவில் அமைப்பின் உறுப்பினர்கள், பொதுமக்கள், புத்திஜீவிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கவன ஈர்ப்பு நடவடிக்கை யில் கலந்து கொண்டவர்கள் கோசங்கள் எழுப்பி, பதாகைகள் ஏந்தி, தங்களின் உரிமைகளை அரசாங்கத்திற்கு வலி யுறுத்தி

மாத்தளை பிரதான நகரில் ஊர் வலமாக வருகை தந்திருந்தனர்.

இதையடுத்து அங்கு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவக பணிப்பாளர் பி.முத்துலிங்கம் தலை மையில் பொதுக்கூட்டம் ஒன்றும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.


















# களுத்துறை நகர் வேலாபுரம் ஆலய உற்சவம் பக்தி பூர்வமாகப் பூர்த்தி!

**(ஆ.ரமேஸ்)**

மேல் மாகாணம் களுத்துறை நகரில் பழமை வாய்ந்த ஆலயமான வேலாபுரம் திருகோவிலின் வருடாந்த உற்சவம் இம்மாதம் 19 ஆம் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இதை தொடர்ந்து 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு பால்குடபவனி நடைப்பெற்று எம் பெருமானுக்கு சங்காபிஷேகம் இடம் பெற்றது. மகேஸ்வர பூஜையுடன் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

அன்றைய தினம் மாலை 6.30 மணிக்கு மாம்பழ திருவிழா நடைபெற்று மறுநாள் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு நித்திய பூஜை, விஷேட வசந்த மண்டப பூஜையுடன் பக்தர்கள் புடைசூழ, மங்கள வாத்தியங்கள் முழங்க, பாண்ட் வாத்திய கலைஞர்களுடன் நடன கலைஞர்களின் நடன நிகழ்வுகளுடன் தேர்பவனி களுத்துறை நகரம் சென்று ஆலயத்தை வந்தடைந்தது.

22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு தீர்த்தோற்சவம் கொடியிறக்கம் செய்யப்பட்டு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.













# மு.கா. பேராளர் மாநாட்டில் நடந்த மோதல் விசாரணைக் குழுவை நியமித்தார் ஹக்கீம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேராளர் மாநாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதம் குறித்து விசாரணைகளை முன்னெடுப்பதற்கு கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் விசேட குழுவொன்றை நியமித்திருக்கின்றார் எனக் கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழுவின் செயலாளரும் உயர்பீட உறுப்பினருமான ஏ.சி. சமால்டீன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை காத்தான்குடி ஹிஸ்புல்லா கலாசார மண்டபத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 31ஆவது பேராளர் மாநாடு நடைபெற்றது. இதன்போது சம்மாந்துறை



பிரதேசத்தைச் சேர்ந்த கட்சியின் இரு ஆதரவாளர் குழுக்களுக்களிடையே கைகலப்பு சம்பவங்கள் இடம்பெற்றிருந்தமையுடன் மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாணைகளை ஆரம்பித்து, அது தொடர்பான அறிக்கையினை ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்குமாறு ரவூப் ஹக்கீம் இந்த விசாரணைக் குழுவினரைப் பணித்துள்ளார்.

கட்சியின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தலைமையில் தவிசாளர் ஏ.எல்.அப்துல் மஜீத், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் கட்சியின் பிரதித் தலைவருமான கலாநிதி ஹிஸ்புல்லா ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.









# கல்முனை - உகந்தை - கதிர்காமம் பஸ் சேவை 28 இல் ஆரம்பமாகிறது





(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனையில் இருந்து உகந்தை மற்றும் கதிர்காமத்திற்கான பஸ் சேவை எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகின்றது என்று கல்முனை போக்குவரத்துச் சாலையின் அத்தியசகர் பி.ஜௌபர் தெரிவித்தார்.

கல்முனையில் இருந்து கதிர்காமத்திற்கான ஒரு வழிப் பாதை பயணத்திற்கான கட்டணம் 950 ரூபா. முற்பதிவுக்கு 35 ரூபா.

காலையிலே ஆறு மணி மற்றும் ஏழு மணிக்கு என இரண்டு பஸ்கள் புறப்படுகின்றன.

அதேபோன்று கதிர்காமத்தில் இருந்து காலை 8 மணிக்கு ஒரு பஸ் புறப்படுகின்றது.

இதேவேளை கல்முனையில் இருந்து உகந்தை மலை முருகன் ஆலயத்திற்கான பஸ் சேவையும் ஆரம்பமாகவிருக்கின்றது. அதற்கான பஸ் கட்டணம் 650 ரூபா. முற்பதிவுக்கு 35 ரூபா.

40 பேர் சேர்ந்து தனியாக ஒரு பஸ் பெற்று கொள்ளலாம் என்று அவர் தெரிவித்தார். அடியார்களின் தொகை தேவைக்கேற்ப பஸ் சேவைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கதிர்காமத்தில் போக்குவரத்து சபைக்கான முன்பதிவு காரியாலயம் அடுத்த வாரம் இருந்து இயங்கத் தொடங்கும்.



# அலுமினியம் மற்றும் பிளாஸ்டிக் தொழிற்சாலை வவுனியா மரக்காரம்பளையில் தீ விபத்தில் நாசம்!

**(கே.வசந்தன்)**

வவுனியா, மரக்காரம்பளை பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலையுடன் இணைந்த களஞ்சியசாலை ஒன்றில் நேற்றுத் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

வவுனியா, மரக்காரம்பளை பகுதியில் அமைந்துள்ள அலுமினியம் மற்றும் பிளாஸ்டிக்கு தொழிற்சாலை மற்றும் வீட்டு தளபாடங்களின் களஞ்சியசாலை என்பவற்றை உள்ளடக்கிய தொழிற்சாலையிலேயே இவ்வாறு தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

தொழில்சாலையில் பணி புரிந்த இருவர் சாப்பாட்டுக்காக வெளியில் சென்ற நிலையில் இத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீ விபத்தையடுத்து வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அப் பகுதி மக்களுடன் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நீர்தாரை வீசி நடவடிக்கை எடுத்தனர்.

எனினும் தீ விபத்தில் தொழிற்சலை முழுமையாக எரிந்து சாம்பலாகியுள்ளதுடன், பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் தீயில் நாசமாகியுள்ளன.

இந்நிலையில் தீ விபத்துக்கான காரணங்கள் குறித்து ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.
















# கொக்குவிலில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய வெதுப்பகத்துக்கு நேற்று சீல்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்த ஒரு வெதுப்பகம் நீதிமன்றக் கட்டளையின் பெயரில் நேற்று சீல் வைத்து மூடப்பட்டது.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் குழுவினரால் தொடர்ச்சியாக உணவு கையாளும் நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, சுகாதார சீர்கேடான உணவு கையாளும் நிலையங்களிற்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதில் 12.06.2024 ஆம் திகதியன்று நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி மேற்பார்வையில் பொது சுகாதார பரிசோதகர்கள் குழாமினால் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 09 வெதுப்பகங்கள் இரவு நேர திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது கொக்குவில் பகுதியில் சுகாதார சீர்கேடாக இயங்கிய 02 வெதுப்பகங்கள் இனங்காணப்பட்டன.

இரண்டு வெதுப்பகங்களிற்கும் எதிராக கொக்குவில் பொது சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவனால் நேற்று யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகளை விசாரித்த நீதவான் ஏ.ஆனந்தராஜா ஒரு வெதுப்பகத்தை சீல் வைத்து மூடுமாறும், மற்றைய வெதுப்பகத்தைத் திருத்த வேலைகளை உடன் மேற்கொள்ளுமாறும் கட்டளையிட்டு வழக்குகளை எதிரவரும் 03.07.2024ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

கொக்குவில் வெதுப்பகம் நேற்று சீல் வைத்து மூடப்பட்டது.

# ஓமந்தையில் மரங்களைக் கடத்திய வாகனத்தை பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி மடக்கினர்!

## பல லட்சம் ரூபா பெறுமதியான மரங்களும் சிக்கின




**(கே.வசந்தன்)**

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் மரக்கடத்தலில் ஈடுபட்ட வாகனம் நிறுத்தாது சென்றமையால் துப்பாக்கிச் சூடு நடத்தி, வாகனத்தை மறித்து பல லட்சம் ரூபா பெறுமதியான மரங்களைத் தாங்கள் கைப்பற்றியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் சாமந்த விஜயசேகரவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாலின் அஜந்த பெரேராவின் உத்தரவின் பேரில், மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் அழகிய வண்ணவின் தலைமையில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கஜேந்திரன், பொலிஸ் சார்ஜன்டுகளான ரன்வெல (6158), சிசிர(44736), பொலிஸ் கான்ஸ்டபிள்களான வீரசேன(78448), ஹேரத் (34712), சுப்புன் (28752), சனத் (25523), குமார (20569), நாமல (95991) மற்றும் சாரதியான திசாநாயக்க (18129) ஆகியோர் அடங்கிய மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர், உடனடியாக செயல்பட்டு ஓமந்தை, பாலமோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு விசேட கண்காணிப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, மரங்களை ஏற்றி வந்த பிக்கப் ரக வாகனம் பொலிஸாரை மோதித் தள்ளும் வகையில் செயற்பட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது. இதனையடுத்து பொலிஸார் அந்த வாகனத்தை நோக்கி 5 முறை துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இதன்போது வாகனத்தை கைவிட்டு மரங்களை கடத்திச் சென்வர்கள் தப்பி ஓடியுள்ளனர். அந்த வாகனத்தை கைப்பற்றிய பொலிஸார் அதில் இருந்து சுமார் 7 லட்சம் ரூபா பெறுமதியான மரங்களை மீட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் அந்த வாகனத்தில் பயணித்தவர்கள் தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனவும் தெரிவித்தனர்.



# வவுனியா தேக்கவத்தையில் இளைஞர் கும்பல் அட்டகாசம்

(வவுனியா நிருபர்)

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் இளைஞர் குழு ஒன்று மேற்கொண்ட தாக்குதலில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் வசிக்கும் இளைஞர் ஒருவர் குழாய் கிணறு அடிக்கும் தொழில் செய்து வருகின்றார். அந்த இளைஞர் வவுனியா நகரில் இருந்து வீடு சென்ற போது

## இருவருக்குக் காயம்

அவரை வழிமறித்த குழு ஒன்று அவர் மீது போத்தல்கள் மற்றும் தடிகாளால் தாக்குதல் நடத்தியுள்ளது.

அத்துடன் அஞ் இளைஞனின் வீட்டிற்குள் நுழைந்து இளைஞனின் தந்தை மீதும் தாதக்குதல் நடத்தியுள்ளது.

காயமடைந்த இருவரும் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, குழாய் கிணறு அடித்தல் தொடர்பில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் நபர் ஒருவர் தனக்கு மிரட்டல் விடுத்தார் எனப் பாதிக்கப்பட்ட இளைஞன் தெரிவித்துள்ளமையுடன், அதன் தொடர்ச்சியாக இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதா என்ற கோணத்திலும் பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.



# தேசிய கராத்தே வீரர்களை தெரிவு செய்யும் போட்டிகள்

2024 ஆம் ஆண்டுக்கான தெற்காசிய மற்றும் ஆசிய கராத்தே சுற்றுப் போட்டிகளில் பங்கேற்கவுள்ள தேசிய கராத்தே வீரர்களை தெரிவு செய்யும் போட்டிகள் கொழும்பில் நேற்று ஆரம்பமாகின.

தேசிய கராத்தே தெரிவுக்குழு தலைவர் அன்ரோ தினேஷ், உறுப்பினர்களான மனோஜ் உனந்தென்ன, தமித் பண்டார விஜேகோன், சி.ஜே. சமரசேகர மற்றும் அனுர ரத்னதேவ ஆகியோர் தலைமையில் தேசிய கராத்தே வீரர்கள் தெரிவு நடைபெற்றது.

பூட்டானில் நடைபெறவுள்ள தெற்காசிய கராத்தே சுற்றுப் போட்டி மற்றும் பிலிப்பைன்ஸில் நடைபெறவுள்ள ஆசிய கராத்தே சுற்றுப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள தேசிய கராத்தே வீரர்களை தெரிவுசெய்யும் போட்டியாக இது அமைந்தது.

லங்கா கராத்தே தோ சம்மேளனத்தின் தலைவர் எச்.எம். சிசிரகுமார, பொதுச் செயலாளர் பி.எம். கீர்த்திகுமார மற்றும் நடுவர் குழாம் தலைவர் ஆர்,ஜே. அலெக்சான்டர் ஆகியோரும் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.




# நீதிமன்ற சுயாதீனத்தன்மைக்கு சவால் நீதிச்சேவைகள் சங்கம் விசேட அறிக்கை

கடந்த 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது, நீதியமைச்சர் நீதிமன்ற கட்டமைப்பு தொடர்பில் விமர்சித்து முன்வைத்த பொறுப்பற்ற கருத்துக்கள் நீதிமன்ற சுயாதீனத்தன்மைக்கு சவால் விடுப்பதாக இலங்கை மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதிவான்களை உள்ளடக்கிய இலங்கை நீதிச்சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசியல் ரீதியிலான தமது இருப்பை சவாலுக்கு உட்படுத்தும் வழக்குகளின் போது நீதிமன்றத்தின் சட்டத்திற்கமைவான தீர்ப்புகள் காரணமாக அதிருப்தி அடைந்ததால் அமைச்சர் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார் என்றே தமது கணிப்புக் காணப்படுகிறது என அந்த சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத் தீர்ப்புகளால் திருப்தி அடையாதவர்கள் அரசமைப்பின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு நடைமுறைக்கு செல்லாமல் நாடாளுமன்ற சிறப்புரிமைகளுக்குள் மறைந்து நீதிமன்றத்தை அவதூறு செய்வது ஜனநாயக சமூகத்தின் அடிப்படையான நீதிமன்ற சுயாதீனத்தன்மைக்கு பகிரங்கமாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கச்சார்பற்ற நீதிபதிகளின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்கான திட்டமொன்று படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படட்டுள்ளதை தாம் அவதானிப்பதாக, இலங்கை நீதிச்சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நீதியமைச்சரின் இந்த கருத்துக்களின் இறுதி விளைவாக மக்களின் இறையாண்மை அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் 3 முக்கிய நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பிக்கை அற்றுப்போவதை தவிர்க்க முடியாது என அந்த சங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கப்பட மாட்டாதாம்!

## தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை அறிவிப்பு

தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கப்பட மாட்டாதென தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

42,000 மெட்ரிக் தொன் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர், பேராசிரியர் ரொஷான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இருமடங்கு கூடுதலாக இவ்வாண்டு தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய்க்கான பற்றாக்குறை, இம்மாத இறுதி அல்லது அடுத்த மாத நடுப்பகுதி வரை தொடருமென நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இறக்குமதியாளர்களுடன் கலந்துரையாடியதாக சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேங்காய் எண்ணெய் கொண்டு வருவதற்கான கொள்கலன் பற்றாக்குறை மற்றும் கப்பல் போக்குவரத்தின் தாமதம் என்பன இந்த நிலைமைக்கு காரணமென அவர் கூறியுள்ளார்.

அது மாத்திரமன்றி இலங்கைக்கு தேங்காய் எண்ணெய் ஏற்றுமதியில் ஈடுபட்ட பிலிப்பைன்ஸ் நிறுவனம் மூடப்பட்டுள்ளமையும் இதற்கான காரணமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமை தொடர்பான முழுமையான அறிக்கையை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 25.06.2024


மேஷம்

இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு சாதகமான நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமான பலன்களை அளிக்கும்.

நீங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். பணியிடத்தில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

இன்று குடும்பத்தில் மகிழ்ச்சியும் நல்ல புரிந்துணர்வும் காணப்படும். அனுசரணையான மன நிலை மூலம் குடும்பத்தில் நல்லிணக்கம் பராமரிக்கலாம்.

இன்று நிதிநிலையில் சில கட்டுப்பாடுகள் காணப்படும். இதனால் வரவு செலவு இரண்டும் காணப்படும்.

இன்று அஜீரணக் கோளாறு பிரச்சினை காணப்படும். உணவில் கவனம் தேவை.


ரிஷபம்

அனுசரணையான அணுகுமுறை மூலம் நீங்கள் இன்றைய நாளை மகிழ்ச்சிகரமாக ஆக்கலாம். இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும்.

உங்கள் மேலதிகாரியுடன் தகவல் தொடர்பில் இருக்கும் பிரச்சினை காரணமாக பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சிறிது அனுசரித்து செல்வதன் மூலம் இந்தச் சூழ்நிலையை நீங்கள் சமாளிக்கலாம்.

குடும்பத்தில் அகந்தைப் போக்கை தவிர்க்க வேண்டும். நெருங்கிய உறவுகளிடம் சண்டை ஏற்படலாம். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளதால் பணத்தை கவனமாகக் கையாளவும்.

இன்று மிதமான ஆரோக்கியமே காணப்படும்.


மிதுனம்

உங்களையும் பிறரையும் மகிழ்விக்க சரியான அணுகுமுறையை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மூலம் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று பணிகள் அதிகம் இருக்கும் காரணத்தினால் அதிருப்தி நிலவும். உங்கள் மேலதிகாரிகளுடன் அனுசரிக்கும் போக்கில் பிரச்சினை காணப்படும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. நெருங்கிய உறவுகளிடம் நல்லிணக்கம் குறைந்து காணப்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. பணத்தை பொறுத்தவரை இன்று முக்கிய முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.


கடகம்

உங்கள் முயற்சிகளில் வெற்றி காண தைரியமாகவும் உறுதியுடனும் செயல்பட வேண்டும்.

கவனமாகப் பணியாற்றுவதன் மூலம் நன்மை பெறலாம். என்றாலும் தவறுகள் ஏற்படாமல் இருக்க எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

உறவு முறை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் உடன் பிறந்தோர் மற்றும் நெருங்கிய உறவுகளிடம் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. இன்று எச்சரிக்கையாகவும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும்.

கால் மற்றும் தொடைகளில் வலி காணப்படும். வயிற்று உப்பசம் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.


சிம்மம்

இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். முயற்சிகள் எடுத்தாலும் அதிருப்தி காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பது வரவேற்கத்தக்கதல்ல. அதனை தவிர்ப்பது நல்லது.

நீங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். பொறுமையை பராமரிக்க வேண்டும். இதனால் வெற்றி அடையலாம். உங்கள் சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் குறைந்து காணப்படும். அகந்தைப் போக்கை தவிர்க்கவும்.

நிதிநிலைமை மகிழ்ச்சி கரமாக இருக்காது. குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அதற்காக இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.


கன்னி

உங்கள் விருப்பங்களை நிறைவேற்ற நீங்கள் நேர்மையான முயற்சி எடுப்பீர்கள். இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். என்றாலும் தேவையற்ற கவலைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

பணிகள் இறுக்கமாக காணப்படும். இன்று பணிகள் அதிகமாக இருப்பதால் நேரத்தோடு பணியை முடிக்க வேண்டும்.

இன்று விரும்பத்தகாத தருணங்கள் ஏற்படலாம். இன்று உறவுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை.

இன்று மிதமான நிதி வளர்ச்சி காணப்படும். நிதி நிலைமையில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

பதற்றம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அனுசரணையான அணுகுமுறை நல்லது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.


துலாம்

இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது. விரைந்து முடிவெடுப்பதை தவிர்க்கவும். இன்று சாதுர்யமாக செயல்பட வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் உறவில் சூடான விவாதங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உங்கள் துணையுடன் தொடர்பு கொள்ளும் போது அமைதியாக இருத்தல் நல்லது.

இன்று நிதி வளர்ச்சி எதிர்பார்க்கும் வகையில் இருக்காது. செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதற்றம் மற்றும் அதிக உழைப்பு காரணமாக உடல் வலி காணப்படும். ஓய்வெடுக்கவும் ஆன்மீக ஈடுபாட்டிற்கும் நேரம் ஒதுக்குங்கள்.


விருச்சிகம்

இன்று பல சௌகரியங்கள் காணப்படும். இன்று பயனுள்ள முடிவுகளை எடுக்கலாம்.

இன்று நீங்கள் மகிழ்ச்சியோடு பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு தகுந்த அங்கீகாரம் கிடைக்கும்.

இன்று உங்களின் உறவுமுறை சிறப்பாக இருக்கும். உங்கள் துணையுடன் இன்றைய நாளை கொண்டாடி மகிழ்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சிக்கான சாத்தியம் உள்ளது. என்றாலும் உங்கள் செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.06.2024

## தனுசு

இன்று நீங்கள் வெற்றி காணலாம். ஆனால் இன்று நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்களின் நேர்மையான முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

உங்கள உடன் பிறந்தோர் மற்றும் நெருங்கிய உறவுகளுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் உறவில் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது.

## கும்பம்

இன்று நீங்கள் உங்களை பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்திக் கொள்வது நல்லது.

பணியில் இன்று வளர்ச்சி காணப்படாது. பணியில் கவனம் குறைவாக இருக்கும். பொறுமையுடனும் எச்சரிக்கையுடனும் பணியாற்ற வேண்டும்.

குடும்பத்தில் நல்ல புரிந்துணர்வு காணப்படாது. நெருங்கிய உறவுகளுடன் விவாதம் அல்லது கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். அது தேவையற்ற செலவுகளாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். அமைதியாக இருப்பது சிறந்தது.

## மகரம்

இன்று ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் மற்றும் வெற்றியைப் பெற்றுத் தரும்.

இன்று உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

இன்று மகிழ்ச்சி குறைந்து காணப்படும். அன்பு குறைந்து காணப்படும். இன்று நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். பணத்தை சிறந்த வகையில் செலவு செய்ய வேண்டும்.

உங்கள் பெற்றோரின் உடல் நலனில் கவனம் தேவை. அதற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரலாம்.

## மீனம்

இன்று திருப்தியும் முன்னேற்றமும் காண திட்டமிட்டு செயல்பட வேண்டும் நம்பிக்கையோடு அணுகுவது உங்களுக்கு நன்மை அளிக்கும்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். வெற்றி கிடைப்பதற்கான வாய்ப்பு அவ்வளவு சிறப்பாக இல்லை.

குழந்தைகளின் வளர்ச்சி கவலை அளிக்கும். உறவில் அகந்தைப் போக்கை கைவிட வேண்டும்.

இன்று பண வரவுக்கு உகந்த நாள் அல்ல. பணத்தை இழக்க வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருக்கவும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.

Blue Ocean Group of Companies | Kelsey Homes 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park